Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House (A Heritage Hotel)
2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு * மணி : 55 * ஓசை : 230 உள்ளூர் செவ்வாய்கிழமை 18.8.2026 விலை : ரூ.3/- பக்கங்கள் : 4 Website : maduraimaninews.com
MADURAI EDITION * VOL : 55 * ISSUE : 230 வெளியூர் புதன்கிழமை 19.8.2026 PRICE : RS.3/- PAGES : 4 email : maduraimaninews@gmail.com

**பா.ஜ.க.வில் மெகா மாற்றம்!**

**கர்நாடக வனப்பகுதியில் 3 தமிழர்கள் சுட்டு கொல்லப்பட்ட இடத்தில் போலீஸார் விசாரணை**

**எஸ்.எஸ்.ஐ. கன்னத்தில் அறைந்த இளைஞர் : 6 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு!**

**ஆவணி மாத ராசிபலன் 12 ராசிகளுக்கும்**

## 3 தமிழர்கள் கொலை விவகாரம்: “தமிழகம் தலையிடக்கூடாது” : டி.கே.சிவகுமார்



சென்னை: ஆக.18–

கர்நாடகாவில் 3 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் இன்று கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. சிபிஐ விசாரணை நடத்த வேண்டும்; உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு கூடுதல் நிதி வழங்க வேண்டும் என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிவலியுறுத்தினார்.

சாம்ராஜ்நகர் மாவட்டம் ஹனூர் அருகே காவிரி வனவிலங்கு சரணாலயப் பகுதியில் மான் வேட்டையில் ஈடுபட்டதாகக் கூறி வேட்டைதோணி சாமி (50), ஜான் ரோஸ் பீட்டர் (42), லாசர் குமார் (33) ஆகியோர் கர்நாடக வனத்துறையால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் ஒருவர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

இது போலி என்கவுன்ட்டர் என்றும், மனித உரிமை மீறல் என்றும் திமுக எம்எல்ஏ மனோஜ் பாண்டியன் குற்றம்சாட்டி, குடும்பங்களுக்கு அரசு வேலை மற்றும் உரிய நிவாரணம் கோரினார்.

பாமக எம்எல்ஏ கணேஷ்குமார், சிபிஐ விசாரணையுடன் ரூ.1 கோடி நிவாரணம் வழங்க வலியுறுத்தினார். இந்திய கம்யூனிஸ்ட் எம்எல்ஏ டி.ராமச்சந்திரன், சிபிஐ விசாரணைக்கு கர்நாடக அரசுக்கு தமிழக அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றார்.

உயிரிழந்த 3 தமிழர்களின் உடல்களும் நேற்று சொந்த ஊர்களில் அடக்கம் செய்யப்பட்டன.

## 3 தமிழர்கள் சுட்டுக்கொலை: சிபிஐ விசாரணை கோரிக்கை!



பெங்களூரு: ஆக.18–

கர்நாடக வனத்துறையினரால் 3 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரத்தில் தமிழக அரசியல் தலைவர்கள் தெரிவித்த கருத்துகளுக்கு கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமார் பதிலளித்துள்ளார். “ஒரு மாநிலத்தின் நிர்வாகத்தில் மற்றொரு மாநிலம் தலையிடக் கூடாது. தங்கள் பணியைச் செய்யட்டும்; நாம் நமது பணியைச் செய்வோம்” என்றார்.

தமிழகத்தின் சட்டம்ஒழுங்கு விவகாரங்களில் தான் தலையிட முடியாததைப் போல, தமிழகமும் கர்நாடக நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என்றும், ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனித்தனி பிரச்சினைகள் உள்ளதாகவும் அவர் கூறினார். கர்நாடகத்தின் கண்ணியத்தையும் பாதுகாப்பையும் காப்பது தங்களது பொறுப்பு என்றும் தெரிவித்தார்.

சாம்ராஜ்நகர் மாவட்டம் ஹனூர் அருகே காவிரி வனவிலங்கு சரணாலயப் பகுதியில் கடந்த 15ம் தேதி அந்தோணிசாமி (50), ஜான் ரோஸ் பீட்டர் (42), லாசர் குமார் (33) ஆகிய 3 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்களின் உடல்கள் நேற்று சொந்த கிராமங்களில் அடக்கம் செய்யப்பட்டன.

இந்த சம்பவத்துக்கு தமிழக அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்து, கர்நாடக அரசிடம் விளக்கம் மற்றும் சிபிஐ விசாரணை கோரியுள்ள நிலையில், டி.கே.சிவகுமார் இந்த பதிலை அளித்துள்ளார்.






■ தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில், விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் 23 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முடிகாணிக்கை மண்டபம், அன்னதானக் கூடம், விருந்து மண்டபங்கள் மற்றும் 235 பூஜைப் பொருட்கள் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சீ.ரமேஷ், தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய்குமார். இ.ஆ.ப்ட்ட வணிகவரி, பதிவுத்துறை மற்றும் அறநிலையங்கள் துறை செயலாளர் ஜெ. குமாரகுரு ரன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் டாக்டர் டி.ஜி. வினய், கூடுதல் ஆணையர் முனைவர் துரை ரவிச்சந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட 36 உதவிப் பொறியாளர்கள் (கட்டுமானம்), 38 உதவி ஸ்தபதிகள், 6 செயல் அலுவலர்கள் (நிலை1 மற்றும் நிலை3) என மொத்தம் 80 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கி, அவர்களுடன் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

## வங்கி கடன் விதிகளில் அதிரடி மாற்றம்!

## உங்களைக் கேட்காமல் வங்கி இனி கடன் விதியை மாற்ற முடியாது!

### RBI புதிய விதி: கடனாளிகளுக்கு பாதுகாப்பு!




புதுடெல்லி, ஆக.18

மிதக்கும் வட்டி விகிதத்தில் பெறப்பட்ட கடன்களை புதிய கட்டமைப்புக்கு மாற்றும்போது, கடன் பெற்றவரின் முறையான அனுமதியை வங்கிகள் பெற வேண்டும் என ரிசர்வ் வங்கி புதிய விதிமுறைகளை முன்மொழிந்துள்ளது.


*‘Interest Rates on Loans and Advances Directions, 2026’ என்ற புதிய விதிகளின்படி, ஏற்கனவே உள்ள கடன்களை புதிய கட்டமைப்புக்கு மாற்றும்போது வாடிக்கையாளரின் முறையான அனுமதியை வங்கிகள் பெற வேண்டும்.

- வாடிக்கையாளருக்குத் தெரியாமல் Benchmark-ஐ மாற்ற முடியாது.
- மாற்றத்துக்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கக் கூடாது.
- மாற்றத்துக்குப் பிறகு வட்டி விகிதம் முந்தைய விகிதத்தைவிட அதிகமாக இருக்கக் கூடாது.
- வீடு, வாகனம் உள்ளிட்ட மிதக்கும் வட்டி கடன்களுக்கு இந்த விதி முக்கிய பாதுகாப்பாக இருக்கும்.
- புதிய விதிகள் இறுதி செய்யப்பட்டால் 2027 ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வரும்.
- ஏற்கனவே உள்ள கடன்களை 2029 ஏப்ரல் 1க்குள் புதிய முறைக்கு மாற்ற வேண்டும்.

கடன் வாங்கியவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் இந்த மாற்றம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அடுத்த டார்கெட் இந்த நாடுதான்!. டிரம்ப்



டெல்லி, ஆக.18–

ஜூனில் கையெழுத்தான 60 நாள் புரிந்துணர்வு ஒப்பந்தம் முடிவடையும் நிலையில், ஈரான் நிபந்தனையின்றி சரணடைய வேண்டும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரித்துள்ளார். எனினும், இந்த விவகாரத்தில் அவசரமாக முடிவெடுக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹார்மூஸ் நீரிணை தொடர்பாக ஈரான்–ஓமன் பேச்சுவார்த்தையில் ஓமன் தலையிட்டால் கடுமையான குண்டுவீச்சு நடத்தப்படும் என டிரம்ப் கூறியுள்ளார். அமெரிக்க கடற்படை முற்றுகையால் ஈரானின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்காசியாவில் அமெரிக்க ஆயுத இருப்பு குறைந்துவிட்டதாகக் கூறப்படுவது தவறு என்றும், இதுவரை பயன்படுத்தப்பட்டது மிகக் குறைந்த அளவிலான ஆயுதங்களே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், ஹார்மூஸ் வழியாக வணிகக் கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்லும் புதிய நடைமுறையை உருவாக்க ஈரானும் ஓமனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. இதன் ஒரு பகுதியாக இரு நாடுகளும் கூட்டுப் போக்குவரத்து வரைபடத்தை இறுதி செய்துள்ளன.

ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பாகேய், ஹார்மூஸில் நிலவும் பாதுகாப்பற்ற சூழலுக்கு அமெரிக்காவின் சட்டவிரோத ராணுவ நடவடிக்கைகளே காரணம் என குற்றம்சாட்டினார். இரு நாடுகளின் இறையாண்மையையும் வணிகக் கப்பல்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதே பேச்சுவார்த்தையின் நோக்கம் என்றும், வெளிப்புற அமைப்புகளின் அழிவுப்பூர்வமான தலையீடுகளால் ஒப்பந்தம் தாமதமாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.





# போதை இல்லாத தமிழ்நாடு திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருடன் சந்திப்பு

திருப்பூர், ஆக.18–

திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகன் அவர்களை, திருப்பூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிளை தலைவர் முகமது காசிம் அவர்களின் தலைமையில், மகளிர் அணி பொறுப்பாளர் அம்சா பேகம் மற்றும் உறுப்பினர்கள், ஊழியர்கள் ஆகியோர் சந்தித்தனர். இச்சந்திப்பின்போது "போதை இல்லா தமிழ்நாடு" பிரச்சார இயக்கம் குறித்து சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.மேலும், இப்பரப்புரையின் வாயிலாக மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு பணிகள், மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால முன்னெடுப்புகள் குறித்து ஆலோசனையும், ஒத்துழைப்பு தொடர்பான கலந்துரையாடலும் நடைபெற்றது.சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இம்முயற்சியை ஆர்வத்துடன் வரவேற்றதோடு, தமது முழுமையான ஒத்துழைப்பையும் வழங்குவதாக தெரிவித்தார். மேலும், படிப்படியாக போதை இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதற்கான அனைத்து பணிகளையும் தாமும் தமது அரசும் மேற்கொள்ளும் என்ற கருத்தையும் தெரிவித்தார்.உடன்:பல்சமய நட்புறவு கழகத்தின் தலைவர் ஷாஜஹான் திருப்பூர் மாவட்ட பொறுப்பாளர் A.அக்கீம் மற்றும் TVK மாநகர் மாவட்ட நிர்வாகிகள் A.பாண்டியன் C.பாபு கார்த்திக் விஜயகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்

# 28 முதல்வர்கள்; 14 பேர் மீது குற்ற வழக்குகள்!



நாட்டின் உள்ள 28 மாநில முதல்வர்களில் 14 பேர் மீது குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ளதாக சுப்ரீம்கோர்ட்டில் தாக்கல் செய்யப் பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

எம்பி, எம்எல்ஏக்கள், மாநில முதல்வர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விரைந்து விசாரிக்க உத்தரவு பிறப்பிக்க கோரி, வழக்கறிஞர் அஸ்வினி உபாத்யாயா சுப்ரீம்கோர்ட்டில் பொதுநல மனுத்தாக்கல் செய்து உள்ளார். அவர் ஜனநாயக சீர்திருத்த சங்கத்தின் அறிக்கையை மேற்கோள் காட்டி, பிரமாண பத்திரம் தாக்கல் செய்து ள்ளார். நாட்டின் உள்ள 28 மாநில முதல்வர்களில் 14 பேர் மீது குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ளது.

அதிக வழக்கு நிலுவையில் உள்ள மாநில முதல்வர்கள் விபரம் பின்வருமாறு:

1.தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி 89 வழக்குகள்

2. மேற்குவங்க முதல்வர் சுவேந்து அதிகாரி 29 வழக்குகள்

3. கர்நாடகா முதல்வர் டி.கே. சிவக்குமார் 19 வழக்குகள்

4. ஆந்திரா முதல்வர் சந்திரபாபு நாயுடு 19 வழக்குகள்

5.கேரள முதல்வர் சதீஷன் 18 வழக்குகள்

6. ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் 5 வழக்குகள்

7. மஹாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னவிஸ் 4 வழக்குகள்

8. ஹிமாச்சல் முதல்வர் சுக்விந்தர் சிங் 4 வழக்குகள்

9. தமிழக முதல்வர் விஜய் 2 வழக்குகள்

10. பீஹார் முதல்வர் சாம்ராட் சவுத்ரி 2 வழக்குகள்

அதேபோல் சிக்கிம் முதல்வர் தமாங், பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான், ஒடிசா முதல்வர் மோகன் சரண் மஜி, ராஜஸ்தான் முதல்வர் பஜன் லால் சர்மா ஆகியோர் மீது தலா ஒரு குற்ற வழக்கு நிலுவையில் இருக்கிறது.

பார்லிமென்ட்

மொத்தம் உள்ள லோக்சபா எம்பிக்கள் 543 பேரில் 251 பேர் மீது குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவற்றில் 170 பேர் (31 சதவீதம்) மீது 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கும் வகையிலான கடும் குற்றவழக்குகள் இருக்கின்றன.

அதேபோல் ராஜ்யசபாவில் மொத்தம் உள்ள எம்.பி.க்கள் 233 பேரில், 75 பேர் (33 சதவீதம்) மீது குற்றவியல் வழக்குகள் உள்ளன. அவற்றில் 40 வழக்குகள், 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கக் கூடிய கடும் குற்ற வழக்குகள் ஆகும்.

மாநில வாரியாக குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ள எம்எல்ஏக்களின் சதவீதம் பின்வருமாறு:

* மேற்குவங்கம் 58 சதவீதம்
* கேரளா 57 சதவீதம்
* ஆந்திரா 56 சதவீதம்
* தெலுங்கானா 49 சதவீதம்
* ஜார்க்கண்ட்45 சதவீதம்
* ஒடிசா 45 சதவீதம்

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.



■ 80 ஆவது, சுதந்திர தினவிழாவை முன்னிட்டு மதுரை கஸ்தூரிபாய் காந்தி மாநகராட்சி பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் தலைமை ஆசிரியர் பாலுமணி தலைமையில் கொடி ஏற்றிட உதவி தலைமை ஆசிரியர் ரீட்டா வரவேற்று பேசிட நிலா சேவை மைய அறக்கட்டளை நிறுவனர் கவிக்குயில் இரா.கணேசன் சிறப்பாளராக கலந்து கொண்டு கலைநிகழ்ச்சியில் பங்கு பெற்ற மாணவிகளுக்கும், முன்னால் இரணுவ வீரர்களின் புதல்விகளான ஆசிரியர்களுக்கும்பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார் விழாவை கணித ஆசிரியர் ஆனந்தி தொகுப்பு வழங்கிட தமிழாசிரியர் ராஜேஸ்வரி நன்றி கூறினார்.

தலையங்கம்

மதுரை மணி

செவ்வாய்க்கிழமை
18.08.2026விசுவாவசு
தமிழ் வருடம்
ஆவணி மாதம் 01–ம் தேதி



# UPIக்கு 'பை' சொல்கிறார்களா இந்தியர்கள்?


டிஜிட்டல் பணப் பரிவர்த்தனையான UPI நாடு முழுவதும் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், பொதுமக்களிடம் புழங்கும் ரொக்கப் பணத்தின் அளவும் புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

ஜூலை 31, 2026 நிலவரப்படி, பொதுமக்களிடம் புழங்கும் ரொக்கப் பணம் ரூ.41.8 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இது முந்தைய ஆண்டை விட சுமார் 13 சதவீதம் அதிகம். அதேநேரத்தில் UPI பயன்பாட்டின் வளர்ச்சி விகிதம் சுமார் 17 சதவீதம் குறைந்துள்ளது.

கிராமங்கள் மற்றும் சிறிய நகரங்களில் அவசரத் தேவைகளுக்கும், பாதுகாப்புக்காகவும் கையில் பணம் வைத்திருக்கும் பழக்கம் தொடர்கிறது. சர்வர் கோளாறு, மின்தடை போன்ற நேரங்களிலும் ரொக்கமே உடனடி தீர்வாக இருப்பதால், டிஜிட்டல் வளர்ச்சிக்கு மத்தியிலும் பணத்துக்கான தேவை நீடிக்கிறது.

தற்போது UPI பரிவர்த்தனைகளுக்கு பொதுமக்களிடம் கட்டணம் இல்லை. ஆனால் பெரிய வணிகர்களுக்கான MDR கட்டணம் எதிர்காலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்ற எதிர்பார்ப்பு, டிஜிட்டல் பரிவர்த்தனை குறித்து சில தயக்கங்களை உருவாக்கியுள்ளது.

இதனால் இந்தியாவின் பொருளாதாரம் முழுமையாக டிஜிட்டலாக மாறாமல், UPI மற்றும் ரொக்கம் இரண்டும் இணைந்த பாதையில் தொடர்ந்து பயணிப்பது இந்தப் புள்ளிவிவரங்கள் மூலம் தெரிகிறது.



# இன்ஜினியரிங் கலந்தாய்வு: 55% இடங்கள் காலி!

சென்னை, ஆக.18–

அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் 418 இன்ஜினியரிங் கல்லூரிகளில், நடப்பு கல்வியாண்டு மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சிறப்பு பிரிவு கலந்தாய்வில் 950 இடங் களும், முதல் சுற்றில் 28,029 இடங்களும் ஒதுக்கப்பட்டன.

இரண்டாம் சுற்று கலந்தாய்வு நேற்று நிறைவடைந்த நிலையில், பொதுப்பிரிவில் 49,984 பேருக்கும், அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவீத உள்ஒதுக்கீட்டில் 9,967 பேருக்கும் என மொத்தம் 59,951 மாணவர்களுக்கு இடங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன.

கலந்தாய்வில் இடம்பெற்ற 1,98,825 பி.இ., பி.டெக். இடங்களில், சிறப்பு பிரிவு, முதல் மற்றும் இரண்டாம் சுற்றுகள் முடிவில் 88,930 இடங்கள் மட்டுமே நிரம்பியுள்ளன. இதனால் 1,09,895 இடங்கள் (55.27%) காலியாக உள்ளன. மொத்த இடங் களில் 44.73 சதவீதம் மட்டுமே நிரம்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.



# கர்நாடக வனப்பகுதியில் 3 தமிழர்கள் சுட்டு கொல்லப்பட்ட இடத்தில் போலீஸார் விசாரணை

## 3 தமிழர்கள் சுட்டுக்கொலை: கர்நாடகாவில் பரபரப்பு

பெங்களூரு, ஆக.18–

கர்நாடக மாநிலம் சாம்ராஜ்நகர் மாவட்டம் ஹனூர் அருகே காவிரி வனவிலங்கு சரணாலயப் பகுதியில் கடந்த 15ம் தேதி அதிகாலை மான் வேட்டையாடியதாகக் கூறி வேட்டைதோணி சாமி (50), ஜான் ரோஸ் பீட்டர் (42), லாசர் குமார் (33) ஆகிய 3 தமிழர்களை வனத்துறையினர் சுட்டுக் கொன்றனர். இதையடுத்து வனத்துறை அலுவலகங்கள் சூறையாடப்பட்ட நிலையில், மூவரின் உடல்களும் அவர்களது சொந்த கிராமங்களில் நேற்று அடக்கம் செய்யப்பட்டன.

சம்பவம் நடந்த ஷாக்யா வனப்பகுதியில் போலீஸார் மற்றும் வனத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்து, அங்கு கிடந்த காலணிகள், தக்காளி, வெங்காயம் உள்ளிட்ட பொருட்களை சேகரித்தனர்.



# மாணவர் போராட்டம் எதிரொலி: JSSC-CGL தேர்வு ரத்து!

ராஞ்சி, ஆக.18–

அரசுத் தேர்வுகளில் முறைகேடு நடந்ததாகக் கூறி ஜார்க்கண்டில் மாணவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், JSSC-CGL தேர்வை ரத்து செய்வதாக முதல்வர் ஹேமந்த் சோரன் அறிவித்துள்ளார். தேர்வு முறைகேடு தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்படும் என்றும், 2014 முதல் நடைபெற்ற தொடர்புடைய தேர்வுகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

டிடிபிஎல் நிறுவனம் நடத்திய அனைத்து தேர்வுகள், அவற்றின் முடிவுகள் மற்றும் தேர்ச்சி பெற்றவர்களின் பட்டியலையும் ரத்து செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். எனினும், முறைகேடு குறித்து சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஜார்க்கண்டில் ஜேபிஎஸ்சி, ஜேஎஸ்எஸ்சி தேர்வுகளில் முறைகேடு நடந்ததாகக் கூறி பல மாதங்களாக போராட்டம் நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே 5 முறை பேச்சுவார்த்தை நடந்தும் தீர்வு ஏற்படாததால் போராட்டம் தீவிரமடைந்தது. தற்போது ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. மேலும், ஜார்க்கண்ட் தேர்வாணையத்தின் 3 உறுப்பினர்களுக்கு சிஐடி சம்மன் அனுப்பிய நிலையில், அவர்களின் ராஜினாமாவையும் ஆளுநர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

# எஸ்.எஸ்.ஐ. கன்னத்தில் அறைந்த இளைஞர் : 6 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு!

தஞ்சாவூர், ஆக.18–

தஞ்சாவூரில் விசிக போராட்டத்தின்போது சிறப்பு காவல் உதவி ஆய்வாளரின் கன்னத்தில் அறைந்த சம்பவம் தொடர்பாக மாவட்ட காவல்துறை சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதில், "நேற்று (17.08. 2026) காலை 12 மணி அளவில் விடுதலை சிறுத் தைகள் கட்சியை சேர்ந்த சுமார் 40 பேர் சாலை மறியலில் ஈடுபட்டதால் அவ்வழியில் போக்குவரத்து தடை ஏற்பட்டிருந்தது. அப்போது. ஆகாஷ் (26) என்பவர் இருசக்கர வாகனத்தில் அவ்வழியாக வந்தபோது, தொடர்ந்து ஹாரன் அடித்துள்ளார். இதனால், அரசியல் கட்சியினருக்கும் ஆகாஷுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இந்த வாக்குவாதம் மேலும் முற்றி இருதரப் பினருக்கும் இடையே மோதல் ஏற்படாமல் தடுக்கும் வகையில் பாதுகாப்பு பணியில் இருந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ஹீம் தலையிட்டு ஆகாஷை அமைதிப்படுத்தி அங்கிருந்து செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளார்.



அப்போது, ஆகாஷ் போலீசாரை நோக்கி தொடர்ச்சியாக ஒருமையில் மரியாதையற்ற மற்றும் தகாத வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளார். தொடர்ந்து வாக்குவாதத்தில் அந்த நபர் ஈடுபட்டதாலும் நிலைமை மேலும் மோசம் அடையாமல் கட்டுக்குள் கொண்டு வரவும் குறைந்தபட்ச பல பிரயோகத்தை ரஹீம் பயன்படுத்தியுள்ளார். அதனைத் தொடர்ந்து அந்த நபர் உடனடியாக ரஹீமை கன்னத்தில் அறைந்துள்ளார். உடனடியாக போலீசார் தலையிட்டு, நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் அந்த நபரின் செயல் மேலும் சட்ட ஒழுங்கு பிரச்சனையை உருவாக்காமல் தடுக்கும் நோக்கத்திலேயே குறைந்தபட்ச பல பிரயோகம் பயன்படுத்தப் பட்டுள்ளது. மேலும் ஆகாஷ் மீது ஏற்கனவே தஞ்சை தாலுகா காவல் நிலையத்தில் கடந்த ஆண்டு பெண் ஒருவரை தாக்கியது தொடர்பாக அவர் மீது வழக்கு பதிவு செய்யப் பட்டிருந்தது தெரிய வருகிறது. மேலும் சில மாதங்களுக்கு முன்பு அவர் பணிபுரியும் இடத்தில் தனது மேற்பார்வையாளரிடம் தகாத மற்றும் அவதூறான வார்த்தைகளை பயன்படுத்தியதாக அவருடைய சூப்பர்வைசர் (Supervisor) மூலம் புகார் அளிக்கப்பட்டு பின்னர் இருதரப்பினரிடையே சமரசம் ஏற்பட்டதாகவும் தெரிய வருகிறது. போலீசார் ஆகாஷை தேவையின்றி தாக்கியதாக கூறப்படும் தகவல் உண்மைக்கு மாறானது.

அரசியல் கட்சியினருக்கும் ஆகாஷுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் மேலும் முற்றி சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக மாறாமல் தடுப்பதே போலீசாரின் முதன்மையான நோக்கமாக இருந்தது. சம்பவத்தின் போது போலீசார் தலையிட்டு நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ரஹிம் கன்னத்தில் அறைந்த இளைஞர் மீது 6 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

மதுரை மணி

உள்ளூர் 18.8.2026 வெளியூர் 19.8.2026




# வேலைவாய்ப்புகள்!

## பேங்க் ஆஃப் பரோடாவில் 206 சிறப்பு அதிகாரி பணியிடங்கள்!

- நிறுவனத்தின் பெயர்: பேங்க் ஆஃப் பரோடா
- அறிவிப்பு எண்: BOB/HRM/REC/ADVT/2026/15
- பணிப் பிரிவு: மத்திய அரசு வேலைவாய்ப்பு
- பணியின் தன்மை: நிரந்தரப் பணி
- மொத்த காலியிடங்கள்: 206 சிறப்பு அதிகாரி (SO) பணியிடங்கள்
- பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
- விண்ணப்பம் தொடங்கும் தேதி: 06.08.2026
- விண்ணப்பிக்க கடைசி தேதி: 26.08.2026
- விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் https://bankofbaroda.bank.in/
- அதிகாரப்பூர்வ இணையதளம்: Bank of Baroda <https://bankofbaroda.bank.in/?utm_source=chatgpt.com>

# ஜோதிடம்




## ஆவணி மாத ராசிபலன் 12 ராசிகளுக்கும்

2026 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் சிம்ம ராசியில் சூரியன் ஆட்சி பெற்று சஞ்சரிப்பதால், 12 ராசிக்காரர்களுக்கும் தன்னம்பிக்கை, தொழில் முன்னேற்றம் மற்றும் குடும்ப வாழ்க்கையில் புதிய மாற்றங்கள் ஏற்படும். சில ராசிகளுக்கு எதிர்பாராத அதிர்ஷ்டமும், சில ராசிகளுக்குப் பணவரவு மற்றும் நிதானம் தேவையான காலகட்டமாகவும் இது அமைகிறது.

பலன்கள்;

- மேஷம்: உற்சாகமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். மாணவர்களுக்குச் சாதகமான காலம். பணியில் புதிய பொறுப்புகள் கிடைக்கும். எனினும் சிறு மனக்குழப்பம் வந்து நீங்கும்.
- ரிஷபம்: குடும்பச் சூழ்நிலையில் கூடுதல் கவனம் தேவை. தனிப்பட்ட வாழ்க்கையில் அனுசரித்துச் செல்வது நல்லது.
- மிதுனம்: தைரியம் பெருகும். சிந்தனைத் திறனும் செயலாற்றும் ஆற்றலும் சிறப்பாக இருக்கும்.
- கடகம்: தன ஸ்தானத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் பொருளாதார ரீதியாகப் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பேச்சில் நிதானம் தேவை.
- சிம்மம்: சூரியன் உங்கள் ராசியில் இருப்பதால் இந்த மாதம் மிகவும் சிறப்பான பலன்களைப் பெறுவீர்கள். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும்.
- கன்னி: நிதிநிலை சார்ந்த விஷயங்களில் கவனம் தேவை. சக ஊழியர்களால் தேவையற்ற மனக்கசப்புகள் வரலாம், எச்சரிக்கையாக இருக்கவும்.
- துலாம்: புதிய இலக்குகளை நிர்ணயித்துச் செயல்படுவீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். குழந்தைகள் வழியில் மகிழ்ச்சியான செய்தி உண்டு.
- விருச்சிகம்: நீண்ட காலத் தடைகள் உடைந்து வெற்றி கிட்டும். தடைபட்ட காரியங்கள் நல்லபடியாக முடியும். பழைய பணம் கைக்கு வரும்.
- தனுசு: சங்கடங்கள் நீங்கி மிகப்பெரிய மாற்றமும் நம்பிக்கையும் உண்டாகும். பணவரவு சிறப்பாக இருக்கும். பயணங்களின்போது கவனம் தேவை.
- மகரம்: புதிய பொறுப்புகள் தேடி வரும். நிலுவைத் தொகைகள் கைக்கு வந்து கடன்சுமை குறையும். பணிச்சுமை சற்று அதிகரிக்கலாம்.
- கும்பம்: கணவன்மனைவி இடையே அல்லது கூட்டாளிகளுடன் சிறு கசப்புகள் வரலாம். கோபத்தைத் தவிர்த்து அனுசரித்துச் செல்வது நல்லது.
- மீனம்: புதிய வேலை வாய்ப்புகள் தேடி வரும். தொழில் மற்றும் வேலை தொடர்பான பயணங்கள் அதிகரிக்கும்.

# 10 ஆண்டுகளில் மருத்துவத்தில் மெகா புரட்சி?



ஏஐ மூலம் மருத்துவத் துறையின் வளர்ச்சி பல மடங்கு வேகமெடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா, இந்தியா, இஸ்ரேல், பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் மருத்துவ ஆராய்ச்சியில் ஏஐ பயன்பாடு அதிகரித்து வருகிறது. குறிப்பாக அமெரிக்க மருத்துவமனைகள், ஏஐ நிறுவனங்களுடன் இணைந்து மருத்துவத் தரவுகளை ஆய்வு செய்தல், நோய்களைக் கண்டறிதல், புதிய மருந்துகளை உருவாக்குதல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

அடுத்த 5 முதல் 10 ஆண்டுகளில், மனிதர்களை பாதிக்கும் பெரும்பாலான நோய்களுக்கு தீர்வு காண ஏஐ உதவக்கூடும் என நம்பப்படுகிறது. மேலும், மருத்துவத் துறையில் கடந்த 50 முதல் 100 ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சியை 10 ஆண்டுகளில் எட்டும் அளவுக்கு ஏஐ முன்னேற்றத்தை வேகப்படுத்தலாம் என்றும், புதிய கண்டுபிடிப்புகளை குறைந்தது 10 மடங்கு அதிகரிக்க முடியும்

இதன் மூலம் புதிய மருந்துகள், புதுமையான சிகிச்சை முறைகள் உருவாகவும், இதுவரை தீர்வு காண முடியாத நோய்களுக்கு சிகிச்சை கண்டுபிடிக்கவும் வாய்ப்பு இருக்கிறது என தோன்றுகிறது. அதேநேரம், ஏஐ மருத்துவத்தில் பயன்படுத்தப்படுவது குறித்து மக்களிடம் இன்னும் முழுமையான நம்பிக்கை உருவாகவில்லை .பயாலஜி மற்றும் மருத்துவத் துறையில் அந்திரோபிக் விரிவாக்கம் செய்து வரும் நிலையில், அடுத்த சில மாதங்களில் முக்கிய முன்னேற்றங்கள் வெளியாகும் என்றும் என நம்பப்படுகிறது

# ஜெ. திருவாசகம் தாயார் மறைவு, உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!



ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம் அவர்களின் தாயார் உடல் நலக்குறைவால் திங்கட்கிழமை இரவு காலமானார். தகவல் அறிந்ததும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெ திருவாசகத்திடம் துக்கம் விசாரித்து தனது இரங்கலை தெரிவித்தார். மேலும் முன்னாள் அமைச்சரும் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளருமான சு. முத்துச்சாமி நேரில் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். ஆயிரக்கணக்கான திமுக நிர்வாகிகள், நகரின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



# வேளாளர் பொறியியல் கல்லூரியில் ட்ரோன் போட்டி

ஈரோடு, ஆக.18–

திண்டல் வேளாளர் பொறியியல் கல்லூரி வளாகத்தில் ஆளில்லா விமானம் (ட்ரோன்) மற்றும் ரோபோடிக்ஸ் பயன்பாடு குறித்த கல்லூரிகளுக்கு இடையேயான போட்டி நடைபெற்றது. 10 க்கும் மேற்பட்ட கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்களது ட்ரோன்கள் மற்றும் ரோபோக்களைக் கொண்டு வந்திருந்தனர். பல்வேறு தடைகளைக் கடந்து செல்வது மற்றும் எடைகளைத் தாங்கிச் செல்வது ஆகியவற்றின் அடிப்படையில் சிறந்த ட்ரோன்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கல்லூரித் தாளாளர் எஸ்.டி. சந்திரசேகர், நிர்வாகி எம். யுவராஜா, முதல்வர் டாக்டர் ஜெயராமன், சென்னை கருடா ஏர் ஸ்பேஸ் அதிகாரி கே.பி. பொற்செல்வி, இசிஇ (ECE) துறைத் தலைவர் நிஷா அஞ்சலின் மற்றும் பேராசிரியர் அஸ்வத் ஆகியோர் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினர்.

# தமிழக வெற்றி கழகம் மற்றும் மனிதநேய ஜனநாயக கட்சி மற்றும் பல் சமய நட்புறவு கழகம் இணைந்து நடத்தும் 80வது சுதந்திர தின விழா



திருப்பூர், ஆக.18–

சுதந்திர தின விழாவிற்கு தலைமை கழகப் பேச்சாளர் கருப்பசாமி பாண்டியன் முன்னிலை ம.ஜ.க.மாவட்ட செயலாளர் பிராண்ட் ஹக்கீம் பல்சமய நட்புறவு கழக பொருப்பாளர் அக்கும் த.வெ.க. கோவில் வழி பகுதி செயலாளர் பஷீர், இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக மேற்கு மாவட்ட செயலாளர் ஜி.கே. சங்கர், கலந்து கொண்டு கொடியேற்றி வைத்து இனிப்பு வழங்கி சிறப்பித்தார்கள் பல் சமய நட்புறவு கழகம் நிர்வாகிகள் தலைவர். ஷாஜஹான் PNK மாவட்ட துணைச் செயலாளர் அர்ஷத் அலி, PNK மாவட்ட இளைஞரணி தலைவர் உசேன் PNK மாவட்ட இளைஞரணி செயலாளர் சுரேஷ் PNK ஒன்றிய துணைச் செயலாளர் பழனிச்சாமி மாநகர இளைஞரணி செயலாளர் ரபீக் PNK பல்லடம் வட கிழக்கு ஒன்றிய செயலாளர் த.வெ.க. அபூபக்கர்சித்திக் அர்ஜுன் பகுதி இணைச் செயலாளர் முத்துவேல் பகுதி பொருளாளர் பகுதி துணைச் செயலாளர் பத்ரன். பகுதி துணைச் செயலாளர் கவின் சக்கரவர்த்தி TVK. 57, 58, 60 வது வார்டு செயலாளர்கள். ஓம் சக்தி ரமேஷ், விக்னேஷ், பாபு, ரமேஷ், மற்றும் பல் சமய நட்புறவு கழக நிர்வாகிகளும் தமிழக வெற்றி கழக நிர்வாகிகளும் மகளிர் அணி நிர்வாகிகளும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# பா.ஜ.க.வில் மெகா மாற்றம்!



நிதின் நவீன் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, பா.ஜ.க.வின் புதிய அகில இந்திய நிர்வாகிகள் பட்டியல் வெளியாகியுள்ளது. கட்சியை மேலும் வலுப்படுத்தும் வகையில் தேசிய அளவில் முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய துணைத் தலைவர்கள்: வசுந்தரா ராஜே, பைஜயந்த் ஜெய் பாண்டா, ரேகா வர்மா, தாரிக் மன்சூர் ஆகியோர் தொடர்கின்றனர். ராம் மாதவ், தீரத் சிங் ராவத், டி. புரந்தேஸ்வரி, பாரதி பிரவீன் பவார், மன்பிரீத் சிங் பாதல், லால் சிங் ஆர்யா, வர்ஷாபென் தோஷி, எம். நாகராஜா, மதுசந்திர கர் ஆகியோர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். சௌதன் சிங், சரோஜ் பாண்டே, டி.கே. அருணா உள்ளிட்டோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய பொதுச் செயலாளர்கள்: ஸ்மிருதி இரானி, வினோத் தாவ்டே, சுனில் பன்சால், பிப்லப் குமார் தேப், சதீஷ் பூனியா, கஜேந்திர படேல், ஹரீஷ் துவிவேதி, சஞ்சய் பாட்டியா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தேசிய பொதுச்செயலாளர் (அமைப்பு) பி.எல். சந்தோஷ் தொடர்கிறார்.

தேசிய செயலாளர்கள்: கவிதா படிதார், கே. சுரேந்திரன், போலா சிங், பிரதீப் வர்மா, பாங்னான் கோன்யாக், அனில் அந்தோணி, சந்தீப் பாதக், மனோஜ் டிக்கா உள்ளிட்ட 16 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் தமிழகத்தைச் சேர்ந்த வெங்கடேசனுக்கும் தேசியச் செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பொருளாளராக பியூஷ் கோயல், மத்திய அலுவலகப் பொறுப்பாளராக தருண் சுக் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பா.ஜ.க. தேசிய மகளிர் அணி தலைவர் பதவியில் இருந்து வானதி சீனிவாசன் விடுவிக்கப்பட்டு, ரூப் குமாரி சௌத்ரிபுதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஐ.டி. பிரிவில் அமித் மால்வியா மாற்றப்பட்டு, தீபக் மஸ்கே புதிய ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஊடகப் பிரிவு ஒருங்கிணைப்பாளராக அனில் பலூனி தொடர்கிறார்.

2027 உத்தரப் பிரதேசம், பஞ்சாப், குஜராத், இமாச்சலப் பிரதேசம், கோவா சட்டப் பேரவைத் தேர்தல்களை எதிர்கொள்ளும் வகையில் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய நிர்வாகிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.




# வேளாண் விஞ்ஞானிகள் விவசாயிகள் கலந்துரையாடல்

ராமநாதபுரம், ஆக.18–

ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மண்டபம் வட்டார அட்மா திட்டத்தின் சார்பில் வேளாண் விஞ்ஞானிகள் – விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. வேளாண்மை இணை இயக்குநர் வாசுகி தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் இயற்கை வேளாண்மை, Farmer ID பதிவு, தென்னை மற்றும் நெற்பயிர் பூச்சிநோய் மேலாண்மை, மண் மாதிரி சேகரிப்பு மற்றும் மண்புழு உரத்தின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.




# நந்தா பொறியியல் கல்லூரியில் முதல் மற்றும் 2ஆம் ஆண்டு வகுப்புகள் துவக்கம்!

பெருந்துறை, ஆக.18–

வெள்ளி விழா கொண்டாடி வரும் நந்தா பொறியியல் கல்லூரியில் முதுகலைத் துறைகளுக்கான முதலாமாண்டு வகுப்புகள் துவக்க விழா முதுகலை துறைகளுக்கான முதலாமாண்டு வகுப்புகள் மற்றும் இளங்கலை இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை பெற்றவர்களுக்கான வகுப்புகளின் துவக்க விழா இனிதே நடைபெற்றது.

இவ்விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையேற்று குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். இவ்விழாவில் ஈரோடு லயன்ஸ் கிளப்பின் முன்னாள் சர்வதேச இயக்குனர் ஜே சி கே. தனபாலன் சிறப்பு விருந்தினராகவும் மற்றும் கல்லூரியின் முன்னாள் மாணவரும் கோவை ஈ.பி.ஏ.எம் நிறுவனத்தின் பொறியாளர், மீனாட்சி சுந்திரம் கௌரவ விருந்தினராகவும் கலந்துக் கொண்டார்கள்

பின்னர், ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர் எஸ். திருமூர்த்தி, கல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ். ரகுபதி மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் முதல் மற்றும் இரண்டாமாண்டு பயிலும் மாணவர்களையும், பெற்றோர்களையும் வரவேற்று வாழ்த்தியும் பேசினார்கள். முன்னதாக முதுகலை நிர்வாகத் துறையின் இறுதியாண்டு பயிலும் மாணவி வி. தர்ஷனா வரவேற்றார்.

நிகழ்வின் முடிவில் முதுகலை கணினித் துறையில் இறுதியாண்டு பயிலும் மாணவி என். நந்தினி நன்றி கூறினார்.

இவ்விழாவினை ஏற்பாடு செய்திருந்த முதுகலை நிர்வாகத் துறையின் தலைவர் முனைவர் டி.பி. சரவணன், கணினித் துறையின் தலைவர் முனைவர் ஆர். சுகுணா, பேராசிரியர்கள் மற்றும் முதுகலை முதலாமாண்டு மாணவர்கள், நேரடி சேர்க்கைப் பெற்ற 2 ஆம் ஆண்டு மாணவர்கள் உட்பட அனைவருக்கும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை நிர்வாகிகள் பானுமதி சண்முகன் எஸ்.நந்தகுமார் பிரதீப் ஆகியோர் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

# காலையில் எழுந்ததும் சோர்வாக இருக்கிறதா?



இரவு போதுமான நேரம் தூங்கிய பிறகும் காலையில் எழுந்தவுடன் சோர்வு, தூக்கக் கலக்கம் ஏற்படுகிறதா? சில எளிய காலை நேரப் பழக்கங்கள் உடலுக்கும் மனதுக்கும் புத்துணர்ச்சி அளிக்க உதவும்.

காலையில் கடைப்பிடிக்க வேண்டியவை:


- அலாரம் அடித்ததும் உடனே எழுந்து, ‘ஸ்னூஸ்’ செய்வதைத் தவிர்க்கவும்.
- எழுந்தவுடன் ஒரு டம்ளர் தண்ணீர் குடிக்கவும்.
- காலை சூரிய ஒளியில் சிறிது நேரம் இருக்கவும்.
- 1015 நிமிடங்கள் நடைப்பயிற்சி, உடற்பயிற்சி அல்லது ஸ்ட்ரெட்சிங் செய்யவும்.
- சர்க்கரை அதிகம் உள்ள உணவுகளைத் தவிர்த்து, புரதம் மற்றும் நார்ச்சத்து நிறைந்த காலை உணவைத் தேர்வு செய்யவும்.
- அன்றைய பணிகளை முன்கூட்டியே திட்டமிடுங்கள்.
- இரவில் சரியான நேரத்தில் தூங்கும் பழக்கத்தை கடைப்பிடிக்கவும்.

தொடர்ந்து சோர்வு நீடித்தால், மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது நல்லது.

மதுரை மணி

உள்ளூர் 18.8.2026 வெளியூர் 19.8.2026

# "என்கவுண்டரா? உண்மையா?"




# நாடு முழுவதும் 20 ஆயிரம் இடங்களில் குடிநீர் வசதி மேம்பாட்டு திட்டம்: விரைந்து செயல்படுத்த ரயில்வே துறை முடிவு

சென்னை, ஆக.18–

ரயில் நிலைய குடிநீரில் பாக்டீரியா தொற்று என சிஏஜி அறிக்கையில் வெளிவந்ததையடுத்து, நாடு முழுவதும் 20 ஆயிரம் இடங்களில் குடிநீர் வசதி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த ரயில்வே துறை முடிவு செய்துள்ளது.

ரயில் நிலையங்களில் பயணிகளுக்கு குளிரூட்டிகளில் வழங்கப்படும் இலவச குடிநீரை பரிசோதனை செய்ததில், 'ஈ கோலி' பாக்டீரியா இருப்பது சிஏஜினனப்படும் இந்திய தலைமை கணக்கு தணிக்கை அலுவலகம் ஆய்வில் தெரியவந்தது.



இதையடுத்து, மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், ரயில்வே வாரியத் தலைவர் மற்றும் தலைமை செயல் அதிகாரி மற்றும் உயர் அதிகாரிகளுடன் இணைந்து கடந்த 16ம் தேதி ஆலோசனை நடத்தினார்.

அதன்படி, முதல்கட்டமாக, ரயில்வே முழுவதும் உள்ள வாட்டர் கூலர்கள் உட்பட 20 ஆயிரம் இடங்களில் புதிய 'டேங்க் டு டாப்' குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து, தெற்கு ரயில்வே பயனாளர் ஆலோசனை குழு உறுப்பினர் ஜாபர் அலி கூறியதாவது: நாடு முழுவதும் ரயில் நிலையங்களில் குடிநீரின் தரத்தை உடனடியாக மேம்படுத்த மத்திய ரயில்வே அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

குடிநீர் விநியோகத்தில் உடனடியாகச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் உத்தரவிடப்பட்டுள்ளது. தேவைப்படும் இடங்களில் பழைய நீர் தேக்கத் தொட்டிகளை அகற்றிவிட்டு, புதிய தொட்டிகளை அமைக்க ரயில்வே முடிவு செய்துள்ளது.

குடிநீர் ஆதாரங்கள் மற்றும் விநியோக மையங்கள் ஆகிய இரண்டிலும் வழக்கமான நீர் தரப் பரிசோதனைகளை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கண்காணிப்பு, தொட்டிகளை சுத்தம் செய்தல் மற்றும் குடிநீர் தர அறிக்கைகளை வெளியிட்டு வெளிப்படைத்தன்மையைப் பேணவும் ரயில்வே துறை முடிவு செய்துள்ளது.

முதல்கட்டமாக, 20 ஆயிரம் இடங்களில் குடிநீர் மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. பின்னர், படிப்படியாக பல்வேறு இடங்களுக்கும் விரிவுப்படுத்தப்படவுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# LPG வாடிக்கையாளர்களுக்கு நிம்மதி!



வீட்டு உபயோக LPG சிலிண்டர் வாடிக்கையாளர்கள் ஆதார் அடிப்படையிலான பயோமெட்ரிக் e-KYC செய்யும் கால அவகாசம் ஆகஸ்ட் 23 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. முதலில் ஆகஸ்ட் 16 கடைசி நாளாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது கூடுதல் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

e-KYC செய்யாதவர்கள் மானிய விலையில் சிலிண்டர் பெறுவதில் சிக்கல் ஏற்படலாம். குறிப்பாக உஜ்வாலா திட்டத்தின் ரூ.300 மானியமும் கிடைக்காமல், சந்தை விலையில் சிலிண்டர் வாங்க வேண்டிய நிலை ஏற்படலாம். e-KYC-ஐ சம்பந்தப்பட்ட கேஸ் நிறுவனத்தின் செயலி மற்றும் Aadhaar Face RD செயலி மூலம் முகத்தை ஸ்கேன் செய்து, பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணுக்கு வரும் OTP மூலம் முடிக்கலாம். அருகிலுள்ள கேஸ் விநியோக மையத்திற்குச் சென்றும் e-KYC செய்யலாம்.




## அரசு ஊழியர்கள் இதை செய்தால்... சம்பளத்தில் 20% பிடித்தம்... முக்கிய அறிவிப்பு

முதல் மனைவியிடம் இருந்து சட்டப்பூர்வமாக விவாகரத்து பெறாமல், இரண்டாவது திருமணம் மேற்கொண்டால் அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தில் 20 சதவீதம் பிடித்தம் செய்யப்படும் என அசாம் அரசு அறிவித்துள்ளது.

அசாம் முதலமைச்சர் ஹிமந்தா பிஸ்வா சர்மா நேற்று (ஆகஸ்ட் 17) அரசு ஊழியர்களுக்கு மிகப்பெரிய எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அதாவது, தங்களின் முதல் மனைவியை விட்டு விலகி, சட்டப்பூர்வமாக விவாகரத்து செய்யாமல், உடனே மற்றொருவரை திருமணம் செய்துகொண்டால் மாநில அரசு அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சினிமா செய்தி




### ஜேசன் சஞ்சய் இயக்கியுள்ள சிக்மா அக்டோபர் 2-ம் தேதி ரிலீஸ்

தமிழக முதலமைச்சர் விஜய்யின் மகன் ஜேசன் சஞ்சய் இயக்குநராக அறிமுகமாகும் 'சிக்மா' திரைப்படம் வரும் அக்டோபர் 2ம் தேதி வெளியாகும் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது

## ஸ்டார்ட்அப் டி.என். தலைமை பதவிக்கு தவெக நிர்வாகிகள் போட்டி!




தமிழக அரசின் ஸ்டார்ட்அப் டி.என். நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி பதவிக்கு தவெக நிர்வாகிகள் இடையே போட்டி ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிறு, குறு, நடுத்தர தொழில் துறையின் கீழ் செயல்படும் இந்நிறுவனம், புத்தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி, முதலீட்டாளர் சந்திப்பு உள்ளிட்ட உதவிகளை வழங்கி வருகிறது. இதன் தலைமை செயல் அதிகாரியாக இருந்த சிவராஜா ராமநாதன், கடந்த ஜூனில் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, புதிய அதிகாரியை நியமிக்க தமிழக அரசு விண்ணப்பங்களை பெற்றுள்ளது.

கடந்த 2021ல் தமிழகத்தில் 2,032 ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் இருந்த நிலையில், தற்போது எண்ணிக்கை 15,000ஐ கடந்துள்ளது. அரசியல் தலையீடு இல்லாமல், தொழில்நுட்பம் மற்றும் புத்தொழில் துறையில் அனுபவமுள்ள நிபுணரை தலைமை செயல் அதிகாரியாக நியமிக்க வேண்டும் என புத்தொழில் முனைவோர் வலியுறுத்தியுள்ளனர்.



■ மதுரை மாநகராட்சி, மண்டலம் 4, நெல்பேட்டை வைகை தென்கரை பகுதியில் கட்டப்பட்டு வரும் வணிக (மீன் விற்பனை) கடைகளை மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



## அடிப்படை வசதிகள் கோரி பெரம்பூரில் முதல்வரின் எம்எல்ஏ அலுவலகத்தில் குவிந்த மக்கள்

சென்னை, ஆக.18–

பெரம்பூர் தொகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரக் கோரி, முதல்வர் விஜய்யின் எம்எல்ஏ அலுவலகத்தில் 50க்கும் மேற்பட்டோர் குவிந்து கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

பெரம்பூர் தொகுதி மக்களின் குறைகளை கேட்டறிய வியாசர்பாடி சர்மா நகர் முதல் தெருவில் எம்எல்ஏ அலுவலகம் புதுப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகத்தை தொகுதி எம்எல்ஏவான முதல்வர் விஜய் திறந்து வைத்தார்.

இந்த அலுவலகத்தில் பொதுமக்கள் குறைகளை தெரிவிப்பதற்காக பிரத்யேக செல்போன் செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், அலுவலகத்தில் கணினி வசதிகளுடன் பணியாளர்களும் நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில், கொடுங்கையூர் வேதாந்தா முருகப்பா தெருவைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் நேற்று பெரம்பூர் எம்எல்ஏ அலுவலகத்துக்கு வந்தனர்.

''கழிவுநீர் வடிகால், சாலை, தெரு விளக்கு உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக ஏற்கெனவே எம்எல்ஏ அலுவலகத்தில் மனு அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை'' என்று பெண்கள் குற்றம் சாட்டினர்.

அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்த தவெக நிர்வாகிகள் மற்றும் போலீஸ் அதிகாரிகள் வந்தனர். அவர்களிடம் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தங்கள் பகுதியில் நிலவும் பிரச்சினைகள் குறித்து கேள்விகளை எழுப்பினர்.

இதையடுத்து, சம்பந்தப்பட்ட துறைகளின் அதிகாரிகளுடன் பேசி, அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தவெக நிர்வாகிகள் உறுதி அளித்தனர். இதைத் தொடர்ந்து அனைவரும் கலைந்து சென்றனர்.

இதுகுறித்து தவெக நிர்வாகிகள் கூறுகையில், ''அப்பகுதியில் தனிநபர் குடும்ப சொத்து தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இதனால் சில அடிப்படை வசதிகளை மேற்கொள்ள முடியவில்லை. இருப்பினும் சட்டத்துக்கு உட்பட்டு அடிப்படை வசதிகள் விரைவாக செய்து கொடுக்கப்படும்'' என்றனர்.



■ திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரத்திக் தாயள், பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

# "தவெக ஆட்சியில் இதுவரை 6 காவல் மரணங்கள்; இனியும் நடக்காமல் முற்றிலுமாக தடுக்க வேண்டும்" - அன்புமணி

சென்னை, ஆக.18–

"ஆட்சிக்கு வந்தால் காவல் மரணங்கள் முற்றிலுமாக தடுத்து நிறுத்தப்படும் என்று கடந்த தேர்தலின் போது தவெக வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்த பின் இது வரை 6 காவல் மரணங்கள் நிகழ்ந்திருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது. இனிவரும் காலங்களில் காவல் மரணங்கள் நடப்பதை முற்றிலுமாகத் தடுக்க வேண்டும்." என பாமக நிறுவனர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.




இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மதுரை சிந்தாமணி காவல் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட மதுரை மேல அனுப்பானடியைச் சேர்ந்த கோயில் பூசாரி பரமசிவம் என்பவரை, காவல்நிலையத்தில் வைத்து கொடூரமாகத் தாக்கியதில் அவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் தீவிர மருத்துவம் அளிக்கப்பட்டும் பயனின்றி உயிரிழந்தார் என்று வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

பூசாரி பரமசிவத்தை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல்துறையினர் தாக்கியதில் உயிரிழந்த பரமசிவம் எந்தத் தவறும் செய்யவில்லை. அண்டை வீட்டாருடன் வாகனம் நிறுத்துவதில் ஏற்பட்ட மோதல் தொடர்பான விசாரணைக்காக கடந்த மாதம் 19ஆம் தேதி அழைத்துச் சென்ற சிந்தாமணி காவல் நிலையக் காவலர்கள், அவரை கொடூரமாகத் தாக்கியதாக கூறப்படுகிறது.

அதைத் தொடர்ந்து வாந்தி, மயக்கம், தலைவலி ஏற்பட்டு அவதிப்பட்ட பரமசிவம் மதுரை தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை க்காக சேர்க்கப்பட்டும் பயனின்றி உயிரிழந்திருக்கிறார்.

காவல்துறையினர் தம்மை கொடூரமாகத் தாக்கியது தான் தமது உடல்நிலை பாதிக்கப்பட்டு உயிருக்கு போராடுவதற்கு காரணம் என்று இறப்பதற்கு முன் பதிவு செய்யப்பட்ட காணொலியில் பரமசிவம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுவோரை காவல்துறையினர் கொடூரமாகத் தாக்குவதும், அதில் பாதிக்கப்பட்டவர்கள் உயிரிழப்பதும் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.

நாகர்கோவில் கிளைச்சிறையில் சபரிவர்மன் என்ற மாற்றுத்திறனாளியும், தூத்துக்குடி அமுதா நகரைச் சேர்ந்த அருணாச்சலம் என்ற இளைஞரும் முறையே சிறைத்துறையினர், காவல்துறையினர் தாக்கியதில் உயிரிழந்ததால் ஏற்பட்ட பதட்டம் விலகும் முன்பே மதுரை கோயில் பூசாரி பரமசிவம் உயிரிழந்தது மனித உரிமை மீறல்கள் குறித்த கவலையை அதிகரித்துள்ளது.

ஆட்சிக்கு வந்தால் காவல் மரணங்கள் முற்றிலுமாக தடுத்து நிறுத்தப்படும் என்று கடந்த தேர்தலின் போது தவெக வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்த பின் இது வரை 6 காவல் மரணங்கள் நிகழ்ந்திருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது. இனிவரும் காலங்களில் காவல் மரணங்கள் நடப்பதை முற்றிலுமாகத் தடுக்க வேண்டும்.

காவலர்கள் தாக்கியதில் உயிரிழந்த பரமசிவம் குடும்பத்தினருக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். இதற்கு காரணமான காவலர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஊத்தங்கரை தவெக எம்எல்ஏவுக்கு எதிரான தேர்தல் வழக்கை நிராகரித்தது உயர் நீதிமன்றம்

சென்னை, ஆக.18–

ஊத்தங்கரை தவெக எம்எல்ஏ இளையராஜாவுக்கு எதிரான தேர்தல் வழக்கை நிராகரித்து சென்னை உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. தேர்தல் வழக்குகள் 6 மாதத்துக்குள் முடிக்கப்படும் என நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை தொகுதி தவெக எம்.எல்.ஏ. இளையராஜாவின் வெற்றியை எதிர்த்து தொகுதி வாக்காளர் கீதா சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

மனு கோரிக்கையில், இளையராஜாவுக்கு பதில் வேறு ஒருவர் பெயர் இடம் பெற்றிருந்ததால், திருத்த மனுவை தாக்கல் செய்ய மனுதாரர் கீதா தரப்புக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதற்கிடையில், தனக்கு எதிரான தேர்தல் வழக்கை நிராகரிக்க கோரி ஊத்தங்கரை தவெக எம்எல்ஏ இளையராஜா மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி, தனக்கு எதிரான தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி ஊத்தங்கரை தவெக எம்எல்ஏ இளையராஜா தொடர்ந்த வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்து உத்தரவிட்டார்.

மேலும், தேர்தல் மனுக்களை பல ஆண்டுகளாக நிலுவையில் வைக்க முடியாது என நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி உறுதிபட தெரிவித்துள்ளார்.

தேர்தல் வழக்குகளில் தீர்வுகாண்பதற்கான சட்டபூர்வ காலக்கெடுவான 6 மாத காலத்திற்குள், அவற்றை முடித்துவைக்க முடிவு செய்துள்ளதாகவும் நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி திட்டவட்டமாக கூறியுள்ளார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd st, Duraisamy Nagar, Madurai - 625016. published by No.5, Namashivayam Nagar 2nd st, Duraisamy Nagar, Madurai - 625016. Editor: Dr.P.Pandiarajan TN/WPP-143/SR/2018-2020